RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 206 | ஆகஸ்டு.1 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# குழந்தைகளின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்காள் கட்டாயம் தண்டிக்கப்படுவார்கள் : பிரதமர் மோடி உறுதி

புது டெல்லி: ஆக.1-

தேர்வுத்தாள் கசிவில் ஈடுபடுபவர்களும், நாட்டின் குழந்தைகளுடைய எதிர்காலத்துடன் விளையாடுபவர்களும் கட்டாயம் தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரமானது அண்மையில் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பன உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் விளைவாக அவர் பதவி விலகியதோடு, தேர்வு முறைகேடு தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதமர் மோடி உறுதியளித்தார்.



அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் நடைபெறுகிற போட்டித் தேர்வுகளில் முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவுகளை தடுக்க, கடந்த 27ஆம் தேதி மத்திய அரசு ‘பொதுத்தேர்வுகள் திருத்த மசோதா 2026’ஐ கொண்டுவந்துள்ளது. விவாதத்திற்கு பிறகு 29ஆம் தேதி மக்களவையிலும், 30ஆம் தேதி மாநிலங்களவையிலும் இந்த மசோதாவானது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவிற்கு வரவேற்பு அளித்து பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக ஊடக பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், “நம்பகமான கல்விமுறையை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை தொடங்கி இருக்கிறோம். இதில் பணிக்குழு அமைத்தல், விரைவு நீதிமன்றம் மற்றும் மாநிலங்களிடம் கருத்து கேட்டல் ஆகியவை அடங்கும். ஏனெனில், சில தசாப்தங்களாக மத்திய மற்றும் மாநில அரசுகள் தேர்வுத்தாள் கசிவு பிரச்சினையை சந்தித்து வருகின்றன.

எனவே, நமது தேர்வு முறையை மேலும் வலுப்படுத்த நாடாளுமன்றம் மசோதா ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது. பொதுத்தேர்வு (முறைகேடு தடுப்பு) திருத்த மசோதா 2026, இந்த வார தொடக்கத்தில் மக்களவையிலும், வியாழக்கிழமை மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனை சட்டமாக கொண்டுவர, குடியரசு தலைவர் திரௌபதி முர்முவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளின் எதிர்காலம் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டு வருவதால், அனைத்து மாநில மற்றும் மத்திய அரசுக்கு கல்வி சீர்திருத்தம் கட்டாய தேவையாக இருக்கிறது. அதில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தேவைப்படுகிறது. தேர்வுத்தாள் கசிவில் ஈடுபடுபவர்களும், நாட்டின் குழந்தைகளுடைய எதிர்காலத்துடன் விளையாடுபவர்களும் கட்டாயம் தண்டிக்கப்படுவார்கள்” என்று கூறியுள்ளார்.

மேலும், தேர்வுத்தாள் கசிவு முறைகேட்டை தடுப்பதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், இந்த நிலைமை தொடர அனுதிக்க மாட்டோம் என்றும், வளர்ந்த இந்தியா என்ற கனவை அடைய அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஆவின் பாலில் ரசாயன நெடி, மாவுக்கலப்படம்: உயர்மட்டக் குழு அமைக்க நயினார் வலியுறுத்தல்



சென்னை: ஆக.1-

“ஆவின் பாலில் வரும் ரசாயன நெடி மற்றும் சேத்தியாதோப்பு மாவுக்கலப்பட முறைகேடு ஆகிய இரண்டு விவகாரங்கள் குறித்தும் உடனடியாக உயர்மட்டக் குழு அமைத்து அரசு விசாரணை நடத்த வேண்டும்” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பதிவில், “தமிழகத்தில் ஆவின் பால் விநியோகம் தொடர்பாகப் பொதுமக்களும் பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வருவது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

ஒருபுறம் ஆவின் பால் பாக்கெட்டுகளில் பிளாஸ்டிக், குளோரின் மற்றும் மருந்து நெடி வீசுவதாகப் பொதுமக்கள் குற்றம்சாட்டும் நிலையில், மறுபுறம் கடலூர் சேத்தியாதோப்பில் பாலில் மரவள்ளிக்கிழங்கு மாவு, அகர் அகர் போன்ற ரசாயனங்களைக் கலந்து கலப்படம் செய்வதாகப் பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இத்தகைய ரசாயனக் கலப்படங்களை அனுமதிப்பதும், முறைகேடுகளைத் தட்டிக்கேட்பவர்களைக் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்துவதும் தற்போதைய தவெக

அரசின் நிர்வாகச் சீர்கேட்டைப் படம்பிடித்துக் காட்டுகிறது. மேலும், முறையான தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் ஏதுமின்றி, தினமும் ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொள்முதல் செய்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

எனவே, ஆவின் பாலில் வரும் ரசாயன நெடி மற்றும் சேத்தியாதோப்பு மாவுக்கலப்பட முறைகேடு ஆகிய இரண்டு விவகாரங்கள் குறித்தும் உடனடியாக உயர்மட்டக் குழு அமைத்து அரசு விசாரணை நடத்த வேண்டும். மக்களின் உடல்நலத்தோடு விளையாடும் ஆவின் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, தூய்மையான ஆவின் பால் விநியோகத்தை அரசு உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக அமைச்சரவையில் காங். பங்கேற்பு குறித்து மறுபரிசீலனை செய்யத் தயாரா? விஜய்க்கு டிடிவி தினகரன் சவால்





சென்னை: ஆக.1-

“மேகேதாட்டு அணை விவகாரத்தில் காங்கிரஸ் மேலிடம் கர்நாடக அரசுக்கு தேவையான அழுத்தத்தை வழங்க மறுக்கும் பட்சத்தில், தமிழக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் பங்கேற்பு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதை ராகுல் காந்தியிடம் நேரடியாக தெரிவிக்க தமிழக முதல்வர் விஜய்க்கு தைரியம் இருக்கிறதா?” என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வினவியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டும் தண்ணீர் திறக்காத கர்நாடக அரசின் முதல்வரை தமிழக முதல்வர் நேரில் சந்திப்பதில் எந்தவித பயனுமில்லை. தமிழக விவசாய சங்கங்கள் இந்த சந்திப்பு அவசியமற்றது என தெரிவித்துள்ள நிலையில் முதல்வர் விஜய் மேற்கொள்ளவுள்ள இந்த சந்திப்பு சம்பிரதாயமா ? அல்லது சந்தர்ப்பவாதமா ?

டெல்லியில் நேற்று நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் காவிரி ஒழுங்காற்றுக் குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி கடந்த ஜூன் மாதத்திற்கு 9.19 டி.எம்.சி. தண்ணீருக்கு 2.91 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே தந்த கர்நாடக அரசு, ஜூலை மாதத்திற்கான 31.24 டி.எம்.சி. தண்ணீரில் 10 சதவீதத்தைக் கூட வழங்காமல் தமிழகத்தையும், தமிழக விவசாயிகளையும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

தமிழகத்திற்கான தண்ணீரை வழங்க முடியாது என நேற்றும் கர்நாடக மாநில முதல்வர் டி.கே. சிவக்குமார் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கும் நிலையில், காவிரி நதிநீர் மற்றும் மேகேதாட்டு அணை தொடர்பாக விவாதிக்க தமிழக முதல்வர் விஜய் கர்நாடகாவுக்குச் செல்வதால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை என்று தமிழக விவசாய சங்கங்களும் தெரிவித்துள்ளனர்.

உரிய நேரத்தில் உச்ச நீதிமன்றமும், காவிரி மேலாண்மை ஆணையமும் தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்த பின்னரும் தமிழகத்திற்கான உரிய நீரை உரிய நேரத்தில் பெற முடியாத முதல்வர் விஜய், கர்நாடகா சென்று அம்மாநில முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது "கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போனானாம்" என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி நாளை தமிழகம் வர உள்ள நிலையில், தமிழக முதல்வர் விஜய், ராகுல் காந்தியை சந்தித்து, காங்கிரஸ் ஆட்சி செய்யும் கர்நாடக அரசு மேகேதாட்டு அணைத் திட்டத்தைக் கைவிடுவதற்கு அரசியல் ரீதியாக உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மேகேதாட்டு அணை விவகாரத்தில் காங்கிரஸ் மேலிடம் கர்நாடக அரசுக்கு தேவையான அழுத்தத்தை வழங்க மறுக்கும் பட்சத்தில், தமிழக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் பங்கேற்பு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதை ராகுல் காந்தியிடம் நேரடியாக தெரிவிக்க தமிழக முதல்வர் விஜய்க்கு தைரியம் இருக்கிறதா ?

எனவே, தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவு குறித்து விவாதிக்க கர்நாடக மாநிலத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் நிலையில், கர்நாடக அரசின் சட்டவிரோதப் போக்கை சட்டரீதியாக முறியடிக்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்து தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து விவாதிக்க வேண்டும் என முதல்வர் விஜய்க்கு மீண்டும் ஓர் முறை வலியுறுத்துகிறேன்.” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

## “வாட்ஸ்அப் தகவலை நம்பி மின் கட்டணப் பிரச்சினையை மு.க.ஸ்டாலின் பேசுகிறார்”



சென்னை: ஆக.1-

தமிழகத்தில் கூடுதலாக மின் கட்டணம் கணக்கீடு தொடர்பாக 3.70 லட்சம் பேர் புகார் அளித்துள்ளதாக மு.க.ஸ்டாலின் தவறான தகவலை நம்பிச் சொல்லியுள்ளார். மக்களை குழப்பும் விதமாக மு.க.ஸ்டாலின், வாட்ஸ் அப்பில் பரவும் தகவல்களை தெரிவித்துள்ளார் என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “கடந்த ஆண்டு மே மாதத்தை ஒப்பிடுகையில் ஜூலை மாதம் சுமார் 11 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு 3 மடங்கு மின் கட்டணம் அதிகரித்திருந்தது. நடப்பு ஆண்டு மே மாதத்தை ஒப்பிடுகையில் ஜூலை மாதம் 9.60 லட்சம் பேருக்குத்தான் கட்டணம் அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கூடுதலாக மின் கட்டணம் கணக்கீடு தொடர்பாக 3.70 லட்சம் பேர் புகார் அளித்துள்ளதாக மு.க.ஸ்டாலின் தவறான தகவலை நம்பிச் சொல்லியுள்ளார். மக்களை குழப்பும் விதமாக மு.க.ஸ்டாலின், வாட்ஸ் அப்பில் பரவும் தகவல்களை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேகேதாட்டு விவகாரத்தில் முதல்வர் விஜய் ஆலோசனை செய்து வருகிறார்; இந்த பிரச்சினையில் தெளிவாக உள்ளோம். சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய போது, அதிமுக எம்எல்ஏக்கள் சட்டப்பேரவையில்தான் இருந்தனர்.

தற்போது, அதிமுக சார்பில் வழக்கு தொடர்ந்துள்ளனர். தமிழக மக்களுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்பதற்காக அதிமுக இப்படி செய்கிறதா எனத் தெரியவில்லை. மேகேதாட்டு விவகாரத்தில் முதல்வர் தரப்பிலிருந்து ஒரு வாரத்துக்குள் தேவையான முடிவுகள் அறிவிக்கப்படும். காவேரியை வைத்துதான் கர்நாடகா அரசியல் செய்கிறது.

முதல்வர் விஜய் கர்நாடகா செல்வது தொடர்பாக இதுவரை அலுவல் ரீதியாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றார்.

## “மின் ரீடிங் முறையை ஒழுங்குபடுத்தும் வரை கட்டணம் செலுத்த அவகாசம் வழங்குக” மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை: ஆக.1-

“மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணி (Reading) சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும்,” என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

“3.70 லட்சம் குடும்பங்களுக்குக் கூடுதல் மின்கட்டணம் வசூலிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு, தன் நிர்வாகத் திறமையின்மையை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது தவெக அரசு. ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே மக்கள் தலையில் அநியாயப் பொருளாதாரச் சுமையைச் சுமத்தியுள்ள இந்த மக்கள் விரோத அரசு இனியாவது திருந்தட்டும்” என்று திமுக ஐடி விங் சார்பில் கருத்து தெரிவித்துள்ளது.

இதனை மேற்கோள் காட்டி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்: “3.70 லட்சம் குடும்பங்கள் கூடுதல் மின்கட்டணம் தொடர்பாகப் புகாரளித்திருப்பதை அரசே வேறு வழியின்றி ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் பொதுமக்களின் குமுறலைப் பார்க்கும்போது, மொத்தம் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை இன்னும் பலமடங்கு இருக்கக் கூடும் என்பது உறுதியாகிறது.

இந்தக் குளறுபடிகள் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்வு காணப்படும் வரை, மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களில், மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணி (Reading) சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும்.” என்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

## லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு முன்ஜாமீன் வழங்கிய உச்சநீதிமன்றம்

டெல்லி: ஆக.1-

டாஸ்மாக் முறைகேடு தொடர்பான வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உச்சநீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கி உள்ளது. மேலும் இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்புத் துறை பதிலளிக்கவும் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் நிர்வாகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்யவும் உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உள்ளது. விசாரணைக்கு ஒத்துழைக்கும் வரை செந்தில் பாலாஜியை கைது செய்யவும் உச்சநீதிமன்றம் தடை விதித்து உள்ளது.

அதே போல பாஸ்போர்ட்டை ஒப்படைக்க வேண்டும் மற்றும் சாட்சிகள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்க கூடாது என்றும் செந்தில் பாலாஜிக்கு உச்சநீதிமன்றம் நிபந்தனை விதித்து உள்ளது. முன்னதாக லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) பதிவு செய்த வழக்கில், செந்தில் பாலாஜியின் முன்ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் நிராகரித்தது. இதனை அடுத்து, அவர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யா காந்த் தலைமையிலான அமர்வு, செந்தில் பாலாஜியை கைது செய்ய இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

## நீலகிரி மாவட்ட. ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் வரும் ஆகஸ்ட் 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஆகஸ்ட்.1-

நீலகிரி மாவட்டத்தில் ஆகஸ்ட்2026ம் மாதத்தில் 21.08.2026 அன்று காலை 11.00 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் உதகமண்டலம், பிங்கர்போஸ்ட் பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.எனவே விவசாயிகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின், அக்கோரிக்கைகளை 05.08.2026 க்குள் தோட்டக்கலை இணை இயக்குநர், தபால்பெட்டி எண் 72, உதகை 643001 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அல்லது jdhooty@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.மாவட்ட ஆட்சியர் மற்றும் இம்மாவட்ட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொள்வதால், விவசாயிகள் விவசாயம் சம்மந்தமான குறைகள் இருப்பின், இக்கூட்டத்தில் தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி, ஆகஸ்ட்.1-

நீலகிரி மாவட்டத்தில் ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு 04.08.2026 0 05.08.2026 தேதிகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசியப் விநியோகம். பொருட்கள்பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்கள் ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு 04.08.2026 மற்றும் 05.08.2026 ஆகிய நாட்களில் வழங்கப்படும். இத்திட்டத்தினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி மற்றும் நாராயணத்தேவன்பட்டி ஊராட்சியில் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

கம்பம், ஆகஸ்ட்.1-

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி மற்றும் நாராயணத்தேவன்பட்டி ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில், பேரூராட்சிகள் துறையின் மூலம் முல்லைப் பெரியாற்றிலிருந்து காமயகவுண்டன்பட்டி பேரூராட்சிக்கு குடிநீர் எடுத்து செல்லும் வகையில் ரூ.19.88 கோடி மதிப்பீட்டில் நீர் தேக்கத்தொட்டிகள், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பணிகளின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, கம்பம் ஊராட்சி ஒன்றியம் நாராயணத்தேவன்பட்டி ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.87.25 இலட்சம் மதிப்பீட்டில் செல்லாயி அம்மன் கோயில் சாலையில் 2.5 கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைத்து சாலையின் இரு பக்கங்களிலும் கரைகள் வலுப்படுத்தும் பணி உள்ளிட்டப் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டதுடன், புதிதாக அமைக்கப்பட்டு வரும் சாலையில் அரசு வழிகாட்டுதலின்படி ஜல்லி, தார் உள்ளிட்டப் பொருட்களின் விகிதாச்சாரம் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் பேரூராட்சிகள்துறை உதவி செயற்பொறியாளர் அம்சா,கம்பம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள். சாமிநாதன்,துர்காதேவி, செயல் அலுவலர் (காமயகவுண்டன் பட்டி).பக்கீர் அகமது மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். தலைமையில்நடைபெற்றது.மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இன்றைய தினம் நடைபெற்ற சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி அடையாள அட்டைகள், மாதாந்திர உதவித்தொகை, மூன்று சக்கர வாகனம், சக்கர நாற்காலி,காதுக்கருவி, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 151 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பெறப்பட்ட மனுக்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு நலத்திட்டங்கள் வழங்கிட அலுவலருக்கு உத்தரவிட்டார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).இராமகிருஷ்ணன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்.கமலராஜன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், மகாமதி சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்களின் 152வது பிறந்தநாளை முன்னிட்டு, நாகர்கோவில், இடலாக்குடியில் அமைந்துள்ள சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபத்திலுள்ள, அன்னாரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் .எஸ். ஆஸ்டின் உட்பட பலர் கலந்துகொண்டனர்

## காவேரிபட்டணத்தில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட்.1-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் பகுதியில் இயங்கி வரும் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் சார்பில், காவேரிப்பட்டினத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இப்போராட்டம் சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. மேனாள் தலைவர் சுப்பிரமணியம், செயலாளர் நந்தகோபால் மற்றும் பொருளாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெயக்குமார் தொடக்க உரையாற்றினார். மேலும், திருநாவுக்கரசு, தண்டபாணி, சொக்கநாதன், பெரியண்ணன்,




கோவிந்தன், அபாயாம்பாள், இளங்கோவன், விஸ்வநாதன், கேசவன், இராமலிங்கம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் நிகழ்வில் பங்கேற்றனர். இப்போராட்டத்தின் போது ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் நலன் கருதி பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. குறிப்பாக, புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2026ல் உள்ள குறைகளை உடனடியாக களைந்து திருத்தம் செய்து உத்தரவிட வேண்டும் என்றும், மருத்துவ காப்பீட்டு மாத பிரீமியம் தொகையை குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், சந்தா தொகையை ரூ. 644/ல் இருந்து ரூ. 390/ ஆக குறைக்க வேண்டும், ஓய்வூதியர்களுக்கு காசில்லா மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும், மருத்துவ காப்பீட்டு அட்டையை உடனடியாக வழங்க வேண்டும் என கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. அதுமட்டுமின்றி, மருத்துவ காப்பீட்டு திட்டம் தொடர்பாக ஓய்வூதியர் சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும், மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும், ஓய்வூதியர்களுக்கு மாத மருத்துவப்படி ரூ. 1000/ வழங்கிட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.நிகழ்வின் நிறைவாக சிவக்குமார் மற்றும் மருத்துவர் வேடியப்பன் ஆகியோர் வாழ்த்துரையாற்ற, கோவிந்தராசு நன்றி உரையுடன் ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.



## ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஆகஸ்ட்.1-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகளிர் குழுவினர்கள் சார்பில் முதலாம் ஆண்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 1500க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

## பொதுமக்கள் நலனுக்காக சொந்த செலவில் போக்கஸ் லைட் அமைத்த 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஜன்னத்துல் பிர்தௌஸ் ராஜா முகமது!

பழனி, ஆகஸ்ட்.1-

பழனி நகராட்சி 25 வது வார்டில், பட்டத்து விநாயகர் கோவில் முதல் படிப்பாரை காளியம்மன் கோவில் வரை உள்ள முக்கிய சாலையில் நீண்ட நாட்களாக தெருவிளக்குகள் செயல்படாததால் பொதுமக்கள் சிரமம் அடைந்து வந்தனர். இதையடுத்து, அதிகாரிகளின் நடவடிக்கைக்காக காத்திருக்காமல், தனது சொந்த செலவில்



உயர்தர போக்கஸ் லைட் அமைத்து, இரவு நேரங்களில் பொதுமக்கள் பாதுகாப்பாகவும், வாகன ஓட்டிகள் சிரமமின்றி பயணிக்கவும் வழிவகை செய்துள்ளார். இந்த சமூகப் பொறுப்புணர்வு மிக்க செயலை அப்பகுதி பொதுமக்கள் மனமார பாராட்டி, நன்றியை தெரிவித்துள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில், ஆதரவற்ற மன நோயரை அடையாளம் கண்டு மீட்டு பாதுகாத்தல், மருத்துவ மதிப்பீடு மற்றும் உயர் சிகிச்சைக்கான பரிந்துரை செய்வதற்கு ஏதுவாக அமைக்கப்படவுள்ள அவசர சிகிச்சை மற்றும் மீள் மையத்தினை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் மரு.ஞானமீனாட்சி, முதன்மை மருத்துவ அலுவலர் மரு.சிவகுமார், மாவட்ட மனநல மருத்துவர் மரு.பிரபவராணி, உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



## சாலையில் குவிந்து கிடக்கும் மணல் குவியல்களால் வாகன ஓட்டிகள் அவதி

கன்னியாகுமரி, ஆகஸ்ட்.1-

கன்னியாகுமரி மாவட்டம் புத்தேரி முதல் வடசேரி செல்லும் பிரதான சாலையில், மொரட்டு சிங்கள் மற்றும் 'டீ பெஞ்ச்' கடைக்கு எதிரே சாலையில் குவிந்து கிடக்கும் மணல் குவியல்களால் வாகன ஓட்டிகள் பெரும் விபத்து அபாயத்தைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த முக்கிய சாலையில் எப்போதும் வாகனப் போக்குவரத்து அதிகளவில் இருக்கும் நிலையில், சாலையோரம் அல்லது சாலையின் நடுப்பகுதியை ஒட்டியவாறு கொட்டப்பட்டுள்ள இந்த மண் குவியல்கள், குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு சிம்ம சொப்பனமாக மாறியுள்ளது. இரவிலும், மழை நேரங்களிலும் இந்த மணல் குவியல்கள் வாகன ஓட்டிகளின் கண்களுக்குத் தெரிவதில்லை. இதனால் சிறு விபத்துகள் ஏற்பட்டு வந்த நிலை மாறி, தற்போது பெரிய விபத்துகள் நேரிடும் சூழல் உருவாகியுள்ளது. ஏற்கனவே குறுகலான இந்தப் பகுதியில், இந்த மண் குவியல்களால் சாலையின் அகலம் குறைந்து, கடுமையான போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டு வருகிறது.சமூக ஆர்வலர்களின் கேள்வி:பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்த மணல் குவியல்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும், நகராட்சி நிர்வாகமும் உடனடியாகப் பார்வையிட்டு அகற்ற முன்வருமா? அல்லது ஏதேனும் பெரிய விபத்து ஏற்பட்ட பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று சமூக ஆர்வலர்களும் அப்பகுதி பொதுமக்களும் கடும் வேதனையுடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, அசம்பாவிதங்கள் நடப்பதற்கு முன்பாக மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு, சாலையோரம் கொட்டப்பட்டுள்ள மண் குவியல்களை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாக உள்ளது.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆகஸ்ட்.1-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் அறிவிப்பு

தேனி, ஆகஸ்ட்.1-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தேனி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலமாக ஆடிப்பட்ட காய்கறி விதைத் தொகுப்புகள் வழங்கப்படுகிறது. ஆடிமாதத்தில் காய்கறி விதைப்பது (ஆடிப்பட்டம்) இயற்கையான பருவமழை ஆதரவு, மண்ணின் ஈரப்பதம் மற்றும் செழிப்பான வளர்ச்சி ஆகிய முக்கிய நன்மைகளை தருகிறது. "ஆடிப்பட்டம் தேடி விதை" என்ற பழமொழியின்படி இக்காலத்தில் விதைக்கும் விதைகள் சிறந்த தட்பவெப்பத்தால் முழுமையாக முளைக்கின்றன.




ஒவ்வொரு தனிநபரும் தங்கள் உணவில் தினசரி 300 கிராம் காய்கறிகள் எடுத்துக்கொள்வது அவசியமாகும். தினமும் காய்கறிகள் உண்பதால், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. மேலும், காய்கறிகளில் நார்ச்சத்து அதிகமாகவும், வைட்டமின்கள் மற்றும் தாது சத்துக்கள் இருப்பதால், ஊட்டச்சத்து மிகுந்த உணவாக விளங்குகிறது. காய்கறிகள் விதைப்புக்கு ஏற்ற மாதமாக ஆடி மாதம் கருதப்படுவதால், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் ஆடிப்பட்ட காய்கறி விதைத் தொகுப்பு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த விதைத் தொகுப்பில் தக்காளி, வெண்டை, கொத்தவரை, பூசணி, கீரை, புடலை, பீர்க்கன் மற்றும் சுரை ஆகிய 8 வகையான விதைகள் அடங்கி உள்ளது. தொகுப்பு ஒன்றின் விலை ரூ.20/ ஆகும். இவை அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.எனவே, விவசாயிகள் அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தங்களின் ஆதார் அட்டை நகல் வழங்கி ஆடிப்பட்ட விதை தொகுப்புகளை பெற்றுக்கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரிஅரசு அருங்காட்சியகத்தில்நடுகற்கள் பேசும் ரகசியங்கள் என்ற தலைப்பில்சொற்பொழிவு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட்.1-

கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் நடுகற்கள் பேசும் ரகசியங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தது.

கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின், கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கம் மற்றும் அரசு அருங்காட்சியகம் இணைத்து, மாவட்ட கலெக்டரின், காலமும் வரலாறும் என்ற சொற்பொழிவு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவன செயலர் கோவிந்தராஜ், நடுகற்கள் பேசும் ரகசியங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு, கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கத் தலைவர் நாராயணமூர்த்தி தலைமை வகித்தார்.



நிகழ்ச்சி ஏற்பாட்டினை, கிருஷ்ணகிரி அருங்காட்சியக காப்பாட்சியர் சிவக்குமார் மற்றும் பணியாளர்கள் செல்வக்குமார், பெருமாள் ஆகியோர் செய்திருந்தனர்.இந்நிகழ்ச்சியில் முன்னாள் தி.மு.க., எம்எல்ஏ., செங்குட்டுவன், கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்க செயலர் தமிழ்செல்வன், துணை செயலர்கள் பாலாஜி, டெய்சி, துணைத்தலைவர் ரவி, லாசிமா ரெஜ்லிதீப்தி, மிருனாலினி, எழுத்தாளர் பெண்ணேஸ்வரன், பேராசிரியர் வெங்கடேஸ்வரன், பாறை ஓவிய ஆய்வாளர் சதாநந்த கிருஷ்ணகுமார், பெரியபனமுட்லு தலைமை ஆசிரியர் ரோகிணி, பல்துறை ஆய்வாளர் சரவணகுமார் ராமச்சந்திரன், பிரகாஷ், நேசகுமார் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த ஆய்வுரையில் கோவிந்தராஜ் ஆற்றிய சொற்பொழிவில், தமிழகத்தில் நடுகற்கள் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புதிய கற்காலத்திலேயே தோன்றி விட்டன என்றும், அதற்கான செங்காவி ஓவிய சான்று மற்றும் பெருங்கற்படைகள் ஐகுந்தத்தை அடுத்த தேன்போலு என்ற இடத்தில் கண்டறியப்பட்டுள்ளதாக படக்காட்சிகளுடன் விளக்கினார். இத்தகைய நினைவுக்கற்கள், பெருங்கற்படைக் காலம், சங்க காலம், பல்லவர் காலம் நுளம்பர் காலம், சோழர் மற்றும் விஜயநகரக் காலங்களில் படிப்படியாக எப்படி வளர்ந்து வந்தது என உதாரணங்களுடன் விளக்கினார். மேலும், கலைஞர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள், பெண்களுக்கான நடுகற்கள், பெண்கள் எப்படி தீக் குளித்தார்கள், அதற்கான பரண்கள் அமைக்கப்பட்டுள்ளதை நடுகல்லில் சுட்டிக்காட்டினார். நடுகற்களில் காணப்படும் அரச சின்னங்கள், காவேரிப்பட்டணத்தின் குறுநில மன்னருக்காக எடுக்கப்பட்ட பள்ளிப்படை நடுகல் என்னும் புதிய வகை நடுகற்கள் குறித்தும் விளக்கினார். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழக நடுகற்களின் தலைமையிடமாக விளங்குவதாகக் குறிப்பிட்டார்.

# கிருஷ்ணகிரி சிவாஜி நகரில் நடந்தபாண்டுரங்க ருக்மணி சுவாமி கோயில்,ருக்மணி திருக்கல்யாண வைபம் நிகழ்ச்சி

## கலெக்டர் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட்.1-

கிருஷ்ணகிரி சிவாஜி நகரில் நடந்த பாண்டுரங்க ருக்மணி சுவாமி கோயிலில், ருக்மணி திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சியில் கலெக்டர் பங்கேற்றார்.கிருஷ்ணகிரி அக்ரஹாரம் சிவாஜி நகரில் அமைந்துள்ள பாண்டுரங்க ருக்மணி கோயில் 90ம் ஆண்டு பிரம்மோற்சவ விழா மற்றும் அம்பா பவானி தேவி கோயில் மஹா கும்பாபிஷேக விழா கடந்த 25ம் துவங்கியது. நேற்று முன்தினம், அம்பா பவானி தேவி கோயில் மகா கும்பாபிஷேக விழா நடந்தது. நேற்று காலை, ருக்மணி திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடந்தது. காலை, கணபதி ஹோமம், ருக்மணி தயார் பாண்டுரங்களுக்கு பட்டு, நகை, மாலையும், பாண்டுரங்கர் ருக்மணிக்கு சீர் வரிசை அனுப்பும் நிகழ்வு நடந்தது. பின்னர் மாலை மாற்றுதல்,








மாங்கல்ய தாரணம், வேத மந்திரங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க ருக்குமணி திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடந்தது. தொடர்ந்து, பக்தர்கள் டோல், தாசி வாசித்து பஜன் பாடல் பாடி நடனம் ஆடினர். இதில், மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் உள்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டன. மாலை 6 மணிக்கு, உற்சவமூர்த்திகள் கிருஷ்ணகிரி நகரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், போதைப்பொருள் தடுப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பான வாராந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (30.07.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசுஷ்ய் அனில் வாகரே, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



# பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க சீன அதிபர் ஜி ஜின்பிங் வருகை

புதுடில்லி: ஆக.1-

சீன அதிபர் ஜி ஜின்பிங், வரும் செப்டம்பர் 12, 13 ஆகிய தேதிகளில் டில்லியில் நடைபெற உள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியாவிற்கு வருகிறார்.

டில்லியில் செப்டம்பர் 12,13 தேதிகளில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பிரிக்ஸ் அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க இருக்கின்றனர்.

அந்த வகையில் இந்த மாநாட்டில் பங்கேற்க செப்டம்பர் 12ம் தேதி சீன அதிபர் ஜி ஜின்பிங் இந்தியா வருகிறார். தற்போது, எல்லையில் ரோந்துப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே அண்மையில் சுமூக உடன்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் சீன அதிபரின் இந்திய வருகை இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவு வலுப்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. 2020ம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்குப் பிறகு அவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்த மாநாட்டில் பங்கேற்க செப்டம்பர் 12ம் தேதி ரஷ்ய அதிபர் புடினும் இந்தியா வருகிறார்.2026ம் ஆண்டுக்கான பிரிக்ஸ் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கும் வேளையில், வரவிருக்கும் இந்த உச்சி மாநாடு டில்லியில் நடைபெறுகிறது.

# ஜஸ்டின் மணிகண்டன் பத்திரப்பதிவை ஆய்வு செய்ய 6 பேர் கொண்ட சிறப்பு குழு அமைப்பு

திண்டுக்கல், ஆகஸ்ட்.1-

ஜஸ்டின் மணிகண்டன் பணிக்காலத்தில் பதிவு செய்த அனைத்து ஆவணங்களை ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது. 6 பேர் கொண்ட சிறப்பு தணிக்கை குழுவை அமைத்து பத்திரப்பதிவு துறை உத்தரவிட்டுள்ளது. நெல்லை துணை பதிவுத்துறை தலைவர் சுவாமிநாதன், சிவகங்கை உதவி பதிவுத்துறை தலைவர் சீனிவாசன் குழுவில் இடப்பெற்றுள்ளனர்.



# ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஆகஸ்ட்.1-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 39ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு இளம்பறவை நற்பணி மன்றம் சார்பில் நான்காம் ஆண்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி இளம்பறவை நற்பணி மன்றத்தின் நிர்வாகிகள் தலைவர் சேட்டு, செயலாளர் ரமேஷ், பொருலாளர் இளவரசன், துணைத்தலைவர் மதுர , திமுக நிர்வாகி கௌதம் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 2000க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதான நிகழ்ச்சினை துவக்கிவைத்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் தச்சமலை அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப்,கலந்துரையாடினார்

கன்னியாகுமரி, ஆகஸ்ட்.1-

கன்னியாகுமரி மாவட்டம். திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட கல்லாடிமாமூடு மினி விளையாட்டு அரங்கம், தச்சமலை அரசு தொடக்கப்பள்ளி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டத்தில் உள்ள கல்லாடிமாமூடு பகுதியில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட மினி அரங்கம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்விளையாட்டு அரங்கம் வாயிலாக கல்லாடிமாமூடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டு, தற்போது சிறப்பாக செயல்பட்டு



வருகிறது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நவீன வசதிகளுடன் கூடிய இந்த மினி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உடற்பயிற்சி செய்ய ஏதுவான பகுதிகள், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான வசதிகளும் உள்ளது.தொடர்ந்து விளையாட்டு மைதானத்தில் பொதுகழிப்பிடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், வேலி மற்றும் அரங்கத்திற்கு வரும் வழிகளில் தெருவிளக்குகள் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் வைத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட விளையாட்டு அலுவலருக்கு அறிவுறுத் தப்பட்டது.மேலும் திருவட்டார் ஊராட்சி ஒன்றியம். பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட தச்சமலை அரசு தொடக்கப்பள்ளியினை நேரில் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்ட மதிய உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஏற்றக்கோடு பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் (20252026) ரூ.28.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையம் கட்டுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெறவில்லை. அருகில் உள்ள நிலப்பிரச்சனையினை விரைந்து முடித்து, பணிகளை துவக்க வட்டாட்சியர் உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட விளையாட்டு அலுவலர் .வினு. திருவட்டார் வட்டாட்சியர் .மரகதவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர், துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# தொலைதூர போக்குவரத்திலும் மின்சாரப் பேருந்துகள்: சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க தமிழக அரசு திட்டம்!

சென்னை, ஆகஸ்ட்.1-

தொலைதூர மின்சாரப் பேருந்துகள் அரசு சார்பில் இயக்குவது குறித்து சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க போக்குவரத்துத் துறை திட்டமிட்டுள்ளது. தனியார் மின்சார பேருந்துகள் போல தொலைதூரம் அரசு சார்பிலும் மின்சார பேருந்துகளை இயக்க போக்குவரத்துத் துறை திட்டம் என தகவல் தெரிவித்துள்ளது

# அங்கன்வாடி குழந்தைகளுக்கு ஆபத்தாக உள்ள பழைய கட்டிடம்: அகற்ற நடவடிக்கை எப்போது?



மானாமதுரை, ஆகஸ்ட்.1-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மேலப்பசலை ஊராட்சிக்குட்பட்ட அரிமண்டபம் கிராமத்தில், அங்கன்வாடி மையத்திற்கு எதிரே உள்ள சேதமடைந்த பழைய நியாயவிலைக் கடை கட்டிடம் அகற்றப்படாமல் இருப்பதால், அங்கு பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு செயல்பட்டு வந்த நியாயவிலைக் கடை கட்டிடம் சேதமடைந்ததைத் தொடர்ந்து புதிய கட்டிடம் அமைக்கப்பட்டாலும், சுமார் 30 ஆண்டுகள் பழமையான பழைய கட்டிடம் இதுவரை இடிக்கப்படாமல் உள்ளது. அந்த கட்டிடத்திற்கு அருகிலேயே அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருவதால், குழந்தைகள் ஆபத்தான சூழலில் உள்ளதாக பெற்றோர்களும் கிராம மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.இந்த பழைய கட்டிடத்தை அகற்றக் கோரி பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், விபத்து ஏற்பட்ட பிறகுதான் அதிகாரிகள் விழிப்பார்களா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே, உயிர் சேதம் ஏற்படும் முன்பே மாவட்ட நிர்வாகமும், உள்ளாட்சி நிர்வாகமும் உடனடியாக தலையிட்டு பழைய கட்டிடத்தை இடித்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கன்வாடி குழந்தைகளின் பெற்றோர்களும், கிராம பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

# பணி நிறைவு பாராட்டு விழா35 ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியை அமுதாவுக்கு சிறப்பான பிரிவு உபசார விழா



கல்லல், ஆகஸ்ட்.1-

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் 35ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி பணி நிறைவு பெற்ற ஆசிரியை அமுதா அவர்களுக்கு பிரிவு உபசார மற்றும் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இப்பள்ளியிலேயே கல்வி பயின்று, அதே பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றது குறிப்பிடத் தக்கது விழாவிற்கு தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை தாங்கினார். ஆசிரியை கற்பகவல்லி வரவேற்புரை வழங்கினார். ஆசிரியர் மோகன்ராசன் முன்னிலை வகித்தார். ஆசிரியர்கள் சாத்தையா மற்றும் சந்தானகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியை அமுதா, தனது பணிக்காலத்தில் மாணவ, மாணவிகளை பல்வேறு போட்டிகளில் பங்கேற்கச் செய்து, ஏராளமான பரிசுகளைப் பெறச் செய்ததுடன், கல்வி மற்றும் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வழிகாட்டியவர் என அனைவரும் பாராட்டினர்.விழாவில் மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற இளநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.பின்னர், ஆசிரியை அமுதா தனது 35 ஆண்டுகால ஆசிரியர் பணியின் அனுபவங்களையும், மாணவர்களுடனான மறக்க முடியாத நினைவுகளையும் பகிர்ந்து கொண்டு நெகிழ்ச்சியுடன் உரையாற்றினார்.இந்நிகழ்ச்சியில் பணி ஓய்வு பெற்ற துணை வேளாண் அலுவலர் மாணிக்கவாசகம், கிராம நிர்வாக அலுவலர் செல்வராஜ், ஆசிரியர்கள் அண்ணாத்துரை, சேவியர், எழிலரசன், சுரேஷ், கார்த்திகேயன், சுப்பிரமணியன், மாரிமுத்து, மணிமேகலை, பாக்கியசெல்வி, உமா, மாலினி, கீர்த்திகா, கல்யாணி, சின்னையா, ஜீவிகா, அபி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.முன்னதாக, இந்த கல்வியாண்டின் தொடக்கத்தில் பணி நிறைவு பெற்ற முதுகலை ஆசிரியை பத்மா அவர்களு க்கும் பாராட்டு விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியை ஆசிரியர்கள் கண்ணதாசன் மற்றும் பிரபு ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

# எல்ஜசி பெண் முகவரின் காரை கொளுத்திய காவலர் ஆயுதப்படைக்கு மாற்றம்




திருச்சி, ஆகஸ்ட்.1-

நம்பர் டோல் கேட் அருகே எல்.ஐ.சி. பெண் முகவரின் காரை காவலர் தீயிட்டு கொளுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திருச்சி மாவட்டம் நம்பர் டோல் கேட் பகுதியில் புவனேஸ்வரி என்பவர் வசித்து வருகிறார். கணவரை இழந்த இவர் தனது மகள், மகனுடன் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறார். இவர் எல்ஜசி முகவராக பணியாற்றி வருகிறார். அந்த வகையில் கொள்ளிடம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சத்தியராஜ் என்பவரை காப்பீடு எடுக்குமாறு பெண் பேசியுள்ளார். எல்ஜசி பெண் முகவர் புவனேஸ்வரியிடம் தவறான நோக்கத்துடன் சத்தியராஜ் பேசியதாக கூறப்படுகிறது.தொடர்ந்து காவலரின் அழைப்பை தொடர்ந்து புவனேஸ்வரி நிராகரித்து வந்துள்ளார். இதில் ஆத்திரமடைந்த காவலர் நேற்று இரவு புவனேஸ்வரி வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் கண்ணாடியை உடைத்து தீயிட்டு கொளுத்தியுள்ளார். தொடர்ந்து எல்ஜசி பெண் முகவர் புவனேஸ்வரி அளித்த புகாரில் காவலர் சத்தியராஜ் ஆயுதப்படைக்கு மாற்றப்பட்டுள்ளார்

# மதுரையில் அடுத்த தலைமுறை ரோபோடிக் அறுவைசிகிச்சை தொழில்நுட்பம் அறிமுகம்மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் தொடக்கம்



மதுரை, ஆகஸ்ட்.1-

மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் (MSSH), அடுத்த தலைமுறை Toumai™ MT-1000 Pro ரோபோடிக் அறுவைசிகிச்சை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ரோபோடிக் அறுவை சிகிச்சையில் 10 ஆண்டுகால அனுபவம் கொண்ட இந்த மருத்துவமனை, நவீன தொழில்நுட்பத்தின் மூலம் தென் தமிழக மக்களுக்கு உலகத்தர மருத்துவ சேவையை வழங்கும் நோக்கில் இந்த புதிய அமைப்பை அறிமுகம் செய்துள்ளது.இந்த ரோபோடிக் அறுவைசிகிச்சை அமைப்பை நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனி மற்றும் நடிகர் பிரசாந்த் தியாகராஜன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். மருத்துவமனை தலைவர் டாக்டர் எஸ். குருசங்கர், மருத்துவ இயக்குநர் டாக்டர் ரமேஷ் அர்த்தநாரி உள்ளிட்ட மூத்த மருத்துவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.குடல் இரைப்பை, கல்லீரல், சிறுநீரக, மகளிர் மருத்துவம், மார்பகம், தைராய்டு, குழந்தைகள் அறுவைசிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிக்கலான அறுவை சிகிச்சைகளில் இந்த ரோபோடிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.60 க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த அமைப்பு, உலகளவில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறுவைசிகிச்சைகளில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் 3ஞி உயர் தெளிவுத்திறன் காட்சி, மருத்துவரின் மணிக்கட்டு அசைவுகளைப் பிரதிபலிக்கும் ரோபோடிக் கருவிகள் மற்றும் மேம்பட்ட இமேஜிங் வசதிகள் இடம்பெற்றுள்ளன. டாக்டர் எஸ். குருசங்கர் கூறுகையில், "அடுத்த தலைமுறை ரோபோடிக் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான, துல்லியமான மற்றும் விரைவான குணமடைதலை உறுதி செய்யும் சிகிச்சைகளை தென் தமிழக மக்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம்" என்றார். டாக்டர் ரமேஷ் அர்த்தநாரி கூறுகையில், குடல் இரைப்பை, கல்லீரல், கணையம், சிறுநீர்ப்பாதை, மகளிர் நோயியல், புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு சிக்கலான அறுவைசிகிச்சைகளில் இந்த தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.மூத்த அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் மோகன் கூறுகையில், இந்த ரோபோடிக் முறையில் அறுவை சிகிச்சை செய்தால் சிறிய தழும்புகள், குறைவான வலி, குறைந்த ரத்த இழப்பு, தொற்று அபாயம் குறைதல், மருத்துவமனையில் தங்கும் நாட்கள் குறைதல் மற்றும் நோயாளிகள் விரைவாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதல் போன்ற பல நன்மைகள் கிடைக்கும் என்றார்.மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கையில், ரோபோடிக் அறுவை சிகிச்சை முறையில் ரோபோ தன்னிச்சையாக செயல்படாது. மருத்துவரின் முழு கட்டுப்பாட்டிலேயே அனைத்து செயல்பாடுகளும் நடைபெறுவதால் அதிக துல்லியமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகின்றன என்று தெரிவித்தது.

# ராமநாதபுரம் அருகே காரும் இருசக்கர வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 3 இளைஞர்கள் உயிரிழப்பு!

ராமநாதபுரம், ஆகஸ்ட்.1-

ராமநாதபுரம் அருகே காரும் இருசக்கர வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 3இளைஞர்கள் உயிரிழந்தனர். கீழக்கரை அருகே மங்க ளேஸ்வரி நகரைச் சேர்ந்த மீனவர்களான கணேசன், வசந்த், சஞ்சய் ஆகிய 3 பேரும் இரு சக்கர வாகனத்தில் ஏர்வாடியில் இருந்து மாயாகுளத்திற்கு நேற்று மாலை சென்றனர். இதையடுத்து புல்லந்தை அருகே தச்சு ஊருணி ஆபத்தான வளைவில் திரும்பியபோது, ராமேஸ்வரத்தில் இருந்து சாயல்குடி சென்ற கார் மோதியது. இதில் படுகாயமடைந்த கணேசன் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். இந்த நிலையில், படுகாயங்களுடன் மீட்கப்பட்ட வசந்த், சஞ்சய் ஆகியோர் ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நேற்றிரவு 7 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். காரில் பயணித்த 4 பேரில் முதுகுளத்தூரைச் சேர்ந்த அருண் குமார் என்பவர் லேசான காயமடைந்தார். தச்சு ஊருணி விலக்கில் இரவு நேரத்தில் போதிய வெளிச்சம் இல்லாததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த விபத்து குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுய கணக்கெடுப்பு காலக்கெடுவை நீட்டிக்க கோரிக்கை

நீலகிரி, ஆகஸ்ட்.1-

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான சுய கணக்கெடுப்பு (Self Enumeration) காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்று கூடலூர் நுகர்வோர் மற்றும் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் (CCHEP) மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம், மத்திய உள்துறை அமைச்சக செயலாளர் மற்றும் இந்திய தலைமைப் பதிவாளர், மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் இணையவழி சுய கணக்கெடுப்பு வசதி அறிமுகப் படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கை. ஆனால், கிராமப்புறங்கள், மலைப்பகுதிகள் மற்றும் தொலைதூர பகுதிகளில் வசிக்கும் மக்கள் இணைய வசதி குறைபாடு, டிஜிட்டல் அறிவு இல்லாமை, தொழில்நுட்ப சிக்கல்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஸ்மார்ட்போன் வசதி இல்லாதது போன்ற காரணங்களால், வருகிற 31ந் தேதிக்குள் சுய கணக்கெடுப்பை நிறைவு செய்ய முடியாத நிலை உள்ளது.எனவே, அனைத்து மக்களும் கணக்கெடுப்பில் பங்கேற்கும் வகையில் சுய கணக்கெடுப்பு காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும். மேலும், கிராமப்புறங்களில் சிறப்பு உதவி மையங்கள் அமைத்தல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இணைய வசதி இல்லாத பகுதிகளில் மாற்று பதிவு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குனிச்சி கிராம நிர்வாக அலுவலகத்தின் செயல்பாடுகள் மற்றும் பராமரிக்கப்படும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# செந்தில் பாலாஜிக்கு முன்ஜாமீன் வழங்கியது உச்ச நீதிமன்றம் டாஸ்மாக் முறைகேடு வழக்கில் உத்தரவு

புது டெல்லி: ஆக.1-

டாஸ்மாக் முறைகேடு வழக்கில், திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் கைதுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. முன்னதாக, சென்னை உயர் நீதிமன்றம் அவரது முன்ஜாமீன் மனுவை நேற்று தள்ளுபடி செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

செந்தில் பாலாஜியின் முன்ஜாமீன் மனுவை இன்று விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யா காந்த் தலைமையிலான அமர்வு, செந்தில் பாலாஜி தனது பாஸ்போர்ட்டை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு முன்ஜாமீன் வழங்கியது.

விசாரணைக்குச் சில மணி நேரங்களுக்கு முன்பு, உச்ச நீதிமன்ற நீதிபதி வி.மோகனா, செந்தில் பாலாஜியின் மனுவை விசாரிப்பதில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார்.

இதையடுத்து, வழக்கின் அவசரத் தன்மையைக் கருத்தில் கொண்டு, தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு பிற்பகல் 1 மணிக்கு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்ட புதிய வழக்கில், செந்தில் பாலாஜியின் முன்ஜாமீன் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்திருந்தது.

முன்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, செந்தில் பாலாஜி கைது செய்யப்பட வாய்ப்புள்ளதால், அவரது மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், முகுல் ரோத்தகி மற்றும் அமித் ஆனந்த் திவாரி ஆகியோர் நீதிபதி சூர்யாகாந்த் தலைமையிலான அமர்விடம் கோரிக்கை விடுத்தனர்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், செந்தில் பாலாஜி விசாரணையின் போக்கை அல்லது தன்மையை செல்வாக்கு செலுத்தி மாற்றியமைப்பார் என்று மாநில அரசு கவலைப்படத் தேவையில்லை என்று உச்ச நீதிமன்ற அமர்வு தெரிவித்தது.

மேலும், செந்தில் பாலாஜி தனது பாஸ்போர்ட்டை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் சாட்சிகளை கலைக்கக் கூடாது என்றும் நிபந்தனைகளை விதித்து, அவருக்கு முன்ஜாமீன் வழங்கியது.

# குவாரிகளை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற கிளை உத்தரவு



மதுரை, ஆகஸ்ட்.1-

மதுரை மேலூர் பகுதியில் சட்டவிரோத மணல் குவாரிகளுக்கு தடை கோரி காவிரி நீர்வள பாதுகாப்பு சங்க செயலாளர் மோகனசுந்தரம் மனு தாக்கல் செய்திருந்தார். நீதிமன்ற தடை உத்தரவை மீறி தொடர்ந்து மணல் குவாரிகள் செயல்படுவதாக வீடியோ ஆதாரத்துடன் மனுதாரர் குற்றம்சாட்டிருந்தார். கனிமவளத்துறை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட குவாரிகளை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற கிளை உத்தரவிட்டுள்ளது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161